(2) நடைமுறைக் கேள்விகள்

(அ) வெள்ளிக்குறியிடப்படாத வினாக்கள் குறித்து

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இன்றையதினம் அன்ஸ்டார்டு குவெஸ்டியன்ஸ் என்று சொல்லி 16 கேள்விகளையும் அதற்கான விடைகளையும் கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்ற விதிகள் 36 (ஏ)ல்—

" Questions requiring long statement or statistics shall not be starred "

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதிலே கொடுக்கப் பட்டிருப்பதில் நம்முடைய அரசாங்கம் பல லட்சக்கணக்காகச் செலவழித்து நிறைவேற்றிய திட்டங்களைப் பற்றியெல்லாம் ஒரு வரி, இரண்டு வரிகளில் விடைகள் அளிக்கப் பட்டிருக்கின்றன. அதைப் பற்றி மேற்கொண்டு அமைச்சர்களிடம் கேள்வி கேட்டு அறிந்து மக்களுக்கு அதுபற்றித் தெளிவுபடுத்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே, எதிர்காலத்திலாவது இப்படிப்பட்ட வாய்ப்புக்களைத் தரும் வகையில் நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சில மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கேள்வியைக் கொடுக்கும்போதே அன்ஸ்டார்டு குவெஸ்டியன்ஸாகத் தருகிறார்கள். எழுத்து மூலம் பதில் வந்தால் போதும் என்ற அளவிலே தருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் முக்கியமான கேள்விகளை, எல்லா உறுப்பினர்களும் ஆர்வம் காட்டக்கூடிய கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தரும்போதே ஸ்டார்டு குவெஸ்டியன்ஸாகத் தரும்படி ஏற்பாடு செய்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரி பிகேஷன். கடந்த திங்கட்கிழமை ஒரு உரிமைப் பிரச்சினையைத் தங்களிடம் கொடுத்தேன். எட்டு நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பல தடவை கூறி யிருக்கிறேன். உரிமைப் பிரச்சினைகள், அட்ஜர்ன்மென்ட் மோஷன்கள் பற்றி இந்தப் பேரவையில் கேள்விகளாகக் கிளப்பக்

கூடாது. தனிப்பட்ட முறையில் பேரவைத் தலைவரின் அறையில் கேட்க வேண்டும்.

அது நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(3) கவன ஈர்ப்பு

மின்வெட்டின் காரணமாக மில்களின் அரவைக் கட்டண உயர்வு குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, சட்டப் பேரவை விதிகள் 41-ன் கீழ் திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

THIRU K. T. K. THANGAMANI: Sir, we have given notice of some adjournment motions. The usual practice of rejecting the motions also has not taken place. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கொடுக்கிறீர்கள். அமைச்சருக்கு அனுப்பி இலாக்காவுக்குப் போய் வர வேண்டும். . .

DR. H. V. HANDE: Sir, may I make a request? For another two days only we will be able to raise such matters. Therefore I request whatever adjournment motions are given, they may be treated slightly more liberally by the Hon. Deputy Speaker.

MR. DEPUTY SPEAKER: The problem is this. Every small problem is brought in. Ordinary problems should not be brought under Rule 42.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, 75 சதவிகித மின்சார வெட்டின் காரணமாக சென்னையில் உள்ள அரவை மில்களில் அரவைக் கட்டணம் 300 சதவிகிதம் வரை உயர்த்தப் பட்டுள்ளது பற்றியும், கோதுமை போன்ற தானியங்களை அரைப்பதில் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைப் பற்றியுமான அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.